# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| MCOP.No. 124/2023 | Date : 20.02.2026 | PW1 |
|---|---|---|
| Name: தினகரன் | த/பெ. சின்னகுழந்தை | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் படா தோஸ்த் என்ற போக்குவண்டியில் சென்று கொண்டிருந்தேன். இது சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனம் என்றால் சரிதான். அதில் பயணிகள் பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்தின் போது மேற்படி வாகனத்தில் முன் பகுதியில் ஓட்டுநருடன் சேர்த்து 3 பேர் அமர்ந்திருந்தார்கள். நான் வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருந்தேன். எனது வயது வருமானம் தொழில் காண்பிப்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. விபத்தின் போது நான் அனுமதியற்ற பயணியாக வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றேன் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை நான் வாடகைக்கு எடுத்து சென்று அதில் பச்சைமிளகாய் எடுத்து சென்றோம். மேற்படி பச்சைமிளகாய் எனக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான். அது எனது ஓட்டுநருக்கு சொந்தமானது. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/–தினகரன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.